பக்கங்கள் – 12
விலை – ரூபா 50
Registered as a Newspaper
உதயன்
சுடர் : 40
கதிர் : 104
திங்கட்கிழமை
10 மார்ச் 2025
மாசி 26 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## கொழும்பில் போட்டியிடாது தமிழரசுக் கட்சி

கொழும்பு, மார்ச் 10
உள்ளூராட்சித் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடும் தீர்மானத்தில் இருந்து பின்வாங்கியுள்ளது இலங்கைத் 11

# ரணிலின் குடியுரிமைக்கு ஆப்பு வைக்கிறது அரசு?

### தூசு தட்டப்படுகிறது 'பட்டலந்த' அறிக்கை
### இவ்வார அமைச்சரவைக் கூட்டத்திலும் ஆராய்வு



**கொழும்பு, மார்ச் 10**
**பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை தொடர்பாக இந்தவாரம் அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.** 10

அல் ஜெஸீரா ஊடகத்துக்கு

## ரணில் கூறிய விடயங்களுக்கு சட்ட நடவடிக்கையே தேவை!

### பட்டியல்களால் பயனில்லை என சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 10
முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அல் ஜெஸீரா ஊடகத்துக்குத் தெரிவித்த விடயங்களை அரசியலுக்கு பயன்படுத்திக் கொள்ளாமல் முறையான சட்ட நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். 11

## காணாமல் ஆக்கப்பட்டோரின் விசாரணை வலுவாக்கப்படும்

### வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 10
வடக்கிலும், தெற்கிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கான பொறிமுறை வலுப்படுத்தப்படும். இது விடயத்தில் விசாரணை 11

## ரணில் மீதான குற்றச்சாட்டுகள் புதிய விசாரணைகள் விரைவில்

### பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் கூறுகின்றார்



கொழும்பு, மார்ச் 10
முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பாக அரசாங்கம் புதிய விசாரணைகளை முன்னெடுக்கும் என்று பொதுமக்கள் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.
இதுதொடர்பாக அவர் 11

## அத்துமீறிய யூடியூப்பரை அமுக்கிப்பிடித்த மக்கள்!

### இளவாலைப் பொலிஸாரிடம் ஒப்படைப்பு

கொழும்பு, மார்ச் 10
யாழ்ப்பாணத்தில் பெண் தலைமைத்துவ குடும்பம் ஒன்றின் வீட்டுக்குள் இரவுநேரம் நுழைந்து, அநாகரிகமாக நடந்து கொண்டார் என்று குற்றஞ்சாட்டப்படும் யூடியூப்பர் ஒருவர் இளவாலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். 10

உள்ளூராட்சி சபைகளில்

## தேர்தலின் பின் ஆட்சியமைக்கும்போது தமிழ்க் கட்சிகளுடன் பேசத் தீர்மானம்!

### தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுவில் தீர்மானம்

வவுனியா, மார்ச் 10
உள்ளூராட்சித் தேர்தல் முடிந்தபின் ஆட்சி அமைக்கின்ற போது ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் பேசி ஆட்சி அமைப்பதற்கான ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டு அது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் 11

## பஸ்கள் கொள்வனவில் 2023ஆம் ஆண்டு மோசடி

### மேலதிகமாகச் செலுத்தப்பட்ட 3,010 மில்லியன் ரூபா!

கொழும்பு, மார்ச் 10
2023ஆம் ஆண்டு பஸ்கள் கொள்வனவு செய்யப்பட்டபோது 3 ஆயிரத்து 10 மில்லியன் ரூபா மேலதிகமாகச் செலுத்தப்பட்டுள்ளதைத் தேசிய கணக்காய்வு அலுவலகம் கண்டுபிடித்துள்ளது என்று போக்குவரத்து பிரதியமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்துள் ளார்.
இந்திய அரசாங்கம் வழங்கிய கடனுதவித் திட்டத்தின் கீழேயே இந்த பஸ்கள் கொள்வனவு 11

## இளைஞர் சடலமாக மீட்பு

கிளிநொச்சி, மார்ச் 10
கிளிநொச்சி, தர்மபுரத்தில் உள்ள மறுவாழ்வு நிலையத்தில் 11

## 'பெரும்' அரசியல்வாதி வீட்டில் மறைந்துள்ள தென்னக்கோன்!

### ரஞ்சன் ராமநாயக்க சந்தேகம்



கொழும்பு, மார்ச் 10
பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள தேசபந்து தென்னக்கோன் ஒரு 'பெரும்' அரசியல்வாதியின் வீட்டில் மறைந்திருக்கலாம் என்று சந்தேகம் வெளியிட்டுள்ளார் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க.
இது தொடர்பில் அவர் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்துள்ளதாவது:- 11




'நரி முகத்தில முழிச்சால் நல்ல சகுனமெண்டுவினம், இஞ்ச நரியாருக்கே சகுனம் சரியில்லைப் போல'

## மயங்கி வீழ்ந்த ஆசிரியர் சாவு

யாழ்ப்பாணம், மார்ச் 10
வீட்டில் திடீரென மயக்கமுற்ற ஆசிரியர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
வடமராட்சி, திக்கத்தைப் 11

## ரயிலுடன் மோதி உயிரிழந்த பசு!



யாழ்ப்பாணம், மார்ச் 10
யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலுடன் மோதி பசுவொன்று உயிரிழந்துள்ளது. 11

## 2025 இறுதிக்குள் டிஜிட்டல் அ.அட்டை

கொழும்பு, மார்ச் 10
புதிய இலத்திரனியல் அடையாள அட்டை வழங்கும் நட 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 09.03.2025
சீட்டிழுப்பு இலக்கம் 4012
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கங்கள் 13 59 63 65
விசேட எழுத்து S

**ஹந்தஹன ராசி சுப பலன்**
திகதி 09.03.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1079
வெற்றி இலக்கினம் மீனம்
வெற்றி இலக்கங்கள் 06 24 34 38

**NLB ஜய**
திகதி 09.03.2025
சீட்டிழுப்பு இலக்கம் 038
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 6 7 9 8

**மெகா பவர்**
திகதி 09.03.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2118
ஆங்கில எழுத்து E
சுப்பர் இலக்கம் 10
வெற்றி இலக்கங்கள் 08 43 62 73

**மஹஜன சம்பத**
திகதி 09.03.2025
சீட்டிழுப்பு இலக்கம் 5770
ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கங்கள் 8 6 7 4 5 8

**தன நிதானய**
திகதி 09.03.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1800
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கங்கள் 26 49 69 76
விசேட எழுத்து P

**அத சம்பத**
திகதி 09.03.2025
சீட்டிழுப்பு இலக்கம் 345
ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கங்கள் 7 4 5 8

# ஐ.எம்.எப். அழுத்தங்களுக்கு அடிபணிகின்றது அரசாங்கம்

## எதிர்க்கட்சி சுட்டிக்காட்டு



கொழும்பு, மார்ச் 10

**நாணயநிதியத்தின்நியாயமற்றஅழுத்தங்களுக்கு அடிபணிந்துமின்கட்டணத்தைஅதிகரிப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது. இந்த முயற்சியை நாம் தோற்கடிப்போம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசாங்கம் வரி வருமானத்தை அதிகரிப்பதற்குப் பதிலாக, மின் கட்டணத்தை அதிகரித்து நாட்டிலுள்ள அனைவரிடமிருந்தும் மறைமுக வரியை அறவிடுவதற்குத் திட்டமிடுகிறது. இதற்கு ஒருபோதும் இடமளிக்கப்பட மாட்டாது.

நாட்டுப் பிரஜைகளுக்கு நியாயமான விலையில் மின்சாரம் கிடைக்கவேண்டும். மாறாக அது வரி அறவிடுவதற்கான மறைமுக முறைமையாக நடைமுறைப்படுத்தப்பட்டால் அதற்கு நாம் ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை. எனவே சூரிய மற்றும் காற்றாலை மின்னுற்பத்திகளை மின்கட்டமைப்பில் இணைத்து அதன் தொழிநுட்பக்கூறுகளை மேம்படுத்தி குறைந்த விலையில் மின்சாரத்தை மக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும்- என்றார். (ச-இ)

**சுபிரி தன சம்பத**
திகதி 09.03.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் 0478
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கம் 9 0 1 5 5 2

**Super Ball DLB**
திகதி 09.03.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 2744
ஆங்கில எழுத்து Q
வெற்றி இலக்கம் 04 09 66 70

**சனிதா DLB**
திகதி 09.03.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
ஆங்கில எழுத்து E
வெற்றி இலக்கம் 18 41 53 71
வெற்றி வாரம் 4905

**SASIRI DLB**
திகதி 09.03.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் 0639
வெற்றி இலக்கம் 13 33 38

**லக்ன ராசி**
திகதி 09.03.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
தனுசு
வெற்றி இலக்கம் 05 22 35 50
சீட்டிழுப்பு வாரம் 4456
DLB

**KAPRUKA DLB**
திகதி 09.03.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
ஆங்கில எழுத்து A
சுப்பர் இலக்கம் 03
வெற்றி இலக்கம் 02 14 50 62
வெற்றி வாரம் 1920

**அத கோடிபதி DLB**
திகதி 09.03.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கம் 06 26 35 51
வெற்றி வாரம் 2570

# கம்பஹாவில் துப்பாக்கிச்சூடு; விசாரணைக்கு 3 குழுக்கள்

கொழும்பு, மார்ச் 10

கம்பஹா அக்கரவிட்டப் பகுதியில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்காக 3 குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார்சைக்கிளில் வந்த இருவர் மோட்டார் சைக்கிள் உதிரிப்பாக விற்பனை நிலையத்திலிருந்த இருவரை இலக்கு வைத்து துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த இருவரும் கம்பஹா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை இந்தத் துப்பாக்கிச்சூடு அண்மையில் சுட்டுக்கொல்லப்பட்ட பாதாளக்குழு உறுப்பினர் கணேமுல்ல சஞ்சீவவின் ஆதரவாளர்களால் நடத்தப்பட்டிருக்கலாம் என்றும் பொலிஸாரால் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (ச-இ)

# 28 பொலிஸாருக்கு திடீர் இடமாற்றம்

கொழும்பு, மார்ச் 10

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதிக்கமைய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் 28 பேர் உடன் நடைமுறைக்குவரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், ஐந்து சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களான எச்.என்.அசங்க, ஜி.ஏ.பி.குணதிலக்க, கே.கே.குணசேகர, ஆர்.பி.அமரசிங்க மற்றும் ஆர்.எச்.பி.குணசேகர ஆகியோருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கடமைகளை உள்ளடக்குவதற்காக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களான என்.என்.எஸ். மெண்டிஸ், டபிள்யூ.பி.ஜே சேனாதீர, எம்.எம்.ஏ.பி மஹகிரில்ல மற்றும் எம்.யு.பி.களுபஹன ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ச-இ)

# யு.எஸ்.எய்ட்டுக்கு மாற்றீடு; அரசாங்கம் பரிசீலிப்பு

கொழும்பு, மார்ச் 10

அமெரிக்க யு.எஸ்.எய்ட் அமைப்பால், இதுவரை நிதியளிக்கப்பட்ட குறைந்தபட்சம் 10 அரசுத் திட்டங்களுக்கு மாற்று நிதியுதவி தொடர்பில் இலங்கை அரசாங்கம் பரிசீலித்துவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யு.எஸ்.எய்ட்டின் நிதி முடக்கம், நாட்டின் வளர்ச்சித் திட்டங்களை கணிசமாகப் பாதித்துள்ளது.

யு.எஸ்.எய்ட் நிதிகள், நீதி மற்றும் நிதி அமைச்சகங்களின் ஐந்து திட்டங்களுக்கும், சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் இரண்டு திட்டங்களுக்கும் வழங்கப்பட்டு வந்தன. 2019 முதல் இதுவரை 233.4 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள அரசுத் திட்டங்களுக்கு யு.எஸ்.எய்ட் உதவியுள்ளதாக தரவுகள் காட்டுகின்றன.

இந்தநிலையில் யு.எஸ்.எய்ட் நிதியுதவில் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களை தொடர்வதற்கான மாற்று நிதியுதவி தொடர்பில் அரசாங்கம் பரிசீலனை செய்து வருகின்றது. (ச-இ)

# குறைந்த விலையில் மதுபானம் அறிமுகம்

கொழும்பு, மார்ச் 10

சட்டவிரோத மதுபானப் பயன்பாட்டைக் குறைக்கும் நோக்கில் குறைந்த விலையில் புதியவகை மதுபானத்தை அறிமுகப்படுத்தத் திட்டமிட்டுள்ளதாக மதுவரித்திணைக்களம் தெரிவித்துள்ளது.

அரசாங்க நிதி தொடர்பான குழுவின் சமீபத்திய கூட்டத்தில், மதுவரி ஆணையாளர் ஜெனரல் உதய குமார தெரிவிக்கையில், மதுபானத்தின் விலை அதிகரிப்பு காரணமாகப் பலர் சட்டவிரோத மதுபானங்களை உட்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதனால் அரசாங்கத்துக்கு வரி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையைத் தடுக்கக் குறைந்த விலையில் மதுபானப் போத்தலை அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக 180 மில்லிலீற்றர் மதுபானப் போத்தல்களை அறிமுகப்படுத்துவதில் கவனம் செலுத்தப்படுகின்றது. இதன் மூலம் 50 முதல் 100 பில்லியன் ரூபா வரை வரி வருவாய் ஈட்ட முடியும் - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாந்தோட்டையில் விண்வெளித்தளம்

## இந்தியா - ஜப்பான் அமைப்பதற்கு ஆராய்வு

**கொழும்பு, மார்ச் 10**

**அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பகுதியில் 1.7 மில்லியன் டொலர் செலவில் விண்வெளித் தளமொன்றை அமைக்கும் திட்டத்தில் முதலீடு செய்வது குறித்து இந்தியாவும் ஜப்பானும் பரிசீலித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

ஜப்பானிய அரசாங்கத்துடன் இணைந்த விண்வெளி ரொக்கெட் ஏவுதள நிறுவனமான 'அஸ்ட்ரோ லோஞ்ச்' இந்தத் திட்டத்தை இந்த நாட்டில் நிறுவத்திட்டமிட்டுள்ளது.

இதுதொடர்பில் இந்தியாவும் பரிசீலித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அம்பாந்தோட்டை, கிரிந்த மற்றும் யால பகுதிகளில் ஈர்ப்புவிசை குறைவாகவும், கடலுக்கு அருகாமையில் இருப்பதாலும் குறித்த இரு நாடுகளும் இந்தத் திட்டத்தில் முதலீடு செய்வதில் கவனம் செலுத்தியுள்ளன. மற்ற நாடுகளுடன் ஒப்பிடும்போது அம்பாந்தோட்டையில் ஈர்ப்புவிசை குறைவாக இருப்பதால், இந்தப் பகுதிகளில் செயற்படுவது பொருத்தமானது என்ற கருத்தையும் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தத் திட்டங்களுக்கான விநியோகங்களுக்கு மத்தள விமான நிலையம் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகம் என்பன பயன்படுத்தப்படவுள்ளன என்றும் இந்தத் திட்டங்கள் வெற்றியடைந்தால் இலங்கையர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## 57 சுயேச்சைகள், 18 அரசியல் கட்சிகள் இதுவரை கட்டுப்பணம்

கொழும்பு மார்ச் 10

எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கு 57 சுயேச்சைக் குழுக்களும் 18 அரசியல் கட்சிகளும் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதுவரை 168 உள்ளூராட்சி மன்றங்களுக்குக் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது. கட்டுப்பணம் செலுத்தும் காலவகாசம் 19 ஆம் திகதியுடன் நிறைவடைய உள்ளது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் மார்ச் 17 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது என்றும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

## இரண்டு மாதங்களில் 5 இலட்சம் சுற்றுலாவிகள்

2025 ஆம் ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் நாட்டுக்கு வருகை தந்த சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை 5 இலட்சத்தைக்கடந்துள்ளதுஎன்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. அதன்படி ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் மார்ச் 5 ஆம் திகதி வரை 530,746 வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



### உள்ளூராட்சித் தேர்தல்
## வாக்களிப்பதற்கு 17,296,330 பேர் தகுதி

எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்கு ஒரு கோடியே 72 இலட்சத்து 96 ஆயிரத்து 330 பேர் தகுதி பெற்றுள்ளனர் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள 336 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் தொடர்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் அவர் இதனைத் தெரிவித்தார். இந்தக் கலந்துரையாடலில் அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகள், துணை மற்றும் உதவி தேர்தல் ஆணையாளர்கள் பங்கேற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## யாழ்.பொலிஸ் பதில் பொறுப்பதிகாரி முல்லைத்தீவுக்கு இடமாற்றம்!

யாழ். தலைமைப் பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி உடன் நடைமுறைக்குவரும் வகையில் முல்லைத்தீவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் திலக் தனபாலவால் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த சில தினங்களுக்கு முன்னர் மதுபோதையில் வாகனம்செலுத்திச் சென்ற ஒருவருக்கு எதிராக யாழ்ப்பாணம் பொலிஸாரினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. குறித்த வழக்கை இல்லாது செய்வதற்காக யாழ்ப்பாணம் தலைமை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரியின் மகன் 20 ஆயிரம் ரூபா இலஞ்சம் பெற்றிருந்தார். இருப்பினும் தொடுக்கப்பட்ட வழக்கு நீதிமன்றத்துக்கு கொண்டுசெல்லப்பட்ட நிலையில் அவருக்கு 20 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. இந்தநிலையில் பாதிக்கப்பட்ட நபர் தலைமை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரியின் மகன் தன்னிடம் இலஞ்சம் பெற்றாரென அவருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டபோதும் பொலிஸார் குறித்த விடயத்தை நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லவில்லை. இந்த விடயம் ஊடகங்களில் பேசுபொருளான நிலையிலேயே குறித்த பொலிஸ் அதிகாரிக்கு உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் முல்லைத்தீவுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. (ச- 27)

## மதுபானவரி அதிகரிப்பு முன்மொழிவு அனுமதி

கொழும்பு மார்ச் 10

மதுவரியை உயர்த்துவதற்கு நிதி அமைச்சு முன்வைத்த முன்மொழிவுக்கு அரசாங்க நிதி பற்றிய குழு அனுமதி வழங்கியுள்ளது.

அரசாங்க நிதி பற்றிய குழு அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தலைமையில் கூடியபோதே இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ச-இ)




எங்கட ஆக்கள் அந்தக் காலத்திலையே 'இடக்கை குடுக்கிறது வலக்கைக்கு தெரியக்கூடாது' எண்டு சொல்லி வைச்சிருக்கினம். ஆனால் இப்ப என்னடா வெண்டால் இடக்கை குடுக்கிறது வலக்கைக்கு மட்டுமில்லை அங்கால நிக்கிற அல்லக்கை, நொள்ளக் கைக்கு எல்லாம் தெரியக்குடுத்தால் தான் அவர் வள்ளல். காதும் காதும் வைச்சமாதிரி குடுத்தால் அது இப்ப 'பஷன்' இல்லை. எல்லாருக்கும் முன்னால காசு குடுத்தவருக்கு குளிர்காய்ச்சல் வாறமாதிரி ஐஸ் வைச்சு கதைச்சு, அதைப் படமோ வீடியோவோ எடுத்து யூரியூப், பேஸ்புக்கில போட்டு பப்ளிசிட்டி தேடுறதுக்குத்தான் இப்ப கூடுதலான ஆக்கள் உதவி செய்யினம்.

வழித்தேங்காயை எடுத்து தெருப்பிள்ளையாருக்கு அடிக்கிறமாதிரி வெளிநாட்டுக்காரரிட்ட காசை வாங்கி, அதை இஞ்ச உள்ள ஆக்களுக்கு குடுத்து திரிஞ்ச ஒரு யூரியூப்பரின்ர உண்மைமுகம் வெளியில வந்திருக்கு. அதுவும் அவரே எடுத்துப் போட்ட வீடியோவிலையே அவர் தான் ஆரெண்டு காட்டியிருக்கிறார். ஒருத்தரின்ர அனுமதி இல்லாமல் போட்டோ, வீடியோ எடுக்கிறது பிழை. சட்டப்படியும் அது குற்றம். அப்பிடி இருந்தும், வீடியோவில வந்து கெஞ்சி அழுதாத்தான் வெளிநாட்டு ஆக்கள் காசு தருவினம் எண்டதுக்காக பள்ளிக்கூடத்தில படிக்கிற பொம்பிளைப் பிள்ளையை வீடியோவில முகம் காட்டச் சொல்லி ஆய்க்கினைப்படுத்திறதும், அந்தப் பிள்ளையை பேசுறதும், நக்கலடிக்கிறதும் அந்த வீடியோவில இருக்கு. இதைப் பார்த்திட்டு பேஸ்புக்கில இருக்கிற எல்லாரும் அதில வாற யூரியூப்காரரை வெட்டோணும்,கொல்லோணும் எண்டு துடிக்கினம். அந்த வீடியோவைப் பார்த்தா ஆருக்கும் ஆத்திரம் வரத்தான் செய்யும். திறந்த வீட்டுக்க நாய் பூந்த மாதிரி, உதவி கேட்டவையின்ர வீட்டுக்குள்ள கண்டபடி உலாத்திறதும், பொம்பிளைப்பிள்ளை உள்ள அறைக்குள்ள கேட்டுக் கேள்வி இல்லாமல் போறதும், அந்தப் பிள்ளையைப் பார்த்து 'ஆரையும் லவ் பண்றியோ? எண்டுறதும், 'வீடியோல முகம் காட்டாம இருக்க இவா என்ன ஐஸ்வர்யா ராயோ? எண்டு உருவக்கேலி செய்யிறதுமா அந்த யூரியூப்பர் ஒரு மிருகம் மாதிரித்தான் நடந்திருக்கிறார். உண்மையில அவருக்கு எதிரா பொம்பிளைப் பிள்ளையளின்ர பிரச்சினைகளுக்கு பொறுப்பா இருக்கிற உத்தியோகத்தர்மார், பொது அமைப்புக்காரர் எல்லாரும் ஏதும் நடவடிக்கை எடுக்கோணும். இல்லாட்டி இப்பிடி எல்லாரும் தொடங்கிடுவினம்.

அந்த யூரியூப்காரர் இப்பிடி வெளிநாட்டுக்காரரின்ர காசை வாங்கி கனபேருக்கு உதவி செய்திருக்கிறார் தான். அதை ஒருத்தரும் இல்லையெண்டேலை. ஆனால் எல்லாம் லாபத்தோடதான். அப்பிடி உதவி செய்யிற வீடியோ போட்டால்தான் அவரின்ர சனலை ஆயிரக்கணக்கான ஆக்கள் பாப்பினம். அப்பிடி கனபேர் பார்த்தால்தான் அவருக்கும் காசு கொட்டும். அதைவிட வெளிநாட்டுக்காரர் தாற காசிலையும் வெட்டுக்கொத்துகள் நடக்கும். அப்பிடி எந்தப் பக்கம் பார்த்தாலும், தன்ர வயித்தை வளர்க்கிறதுக்காக அடுத்தவையின்ர பசியைக் காட்டி இவரும் பிச்சைதான் எடுக்கிறார். ஆனால் அதை வெளியில காட்டாமல் தான் ஏதோ பாரிவள்ளலின்ர வாரிசு எண்ட நினைப்பில மிதந்திருக்கிறார். கஷ்டப்பட்ட ஆக்களை கண்டபடி பேசுறதும்,அவையை நக்கலடிக்கிறதும் எண்டு வீடியோக்கள் போட்டு ஆள் 'பன்' எடுத்திருக்கிறார். இப்ப எல்லாத்துக்கும் சேர்த்து அவர் போட்ட வீடியோவே அவருக்கு ஆப்பாப் போட்டுது.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமான நாளாக இருக்கும். தந்தை வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சகோதரர்கள் உங்களிடம் ஆலோசனை கேட்டு வருவார்கள். சிலருக்கு அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** மகிழ்ச்சி தரும் செய்தி ஒன்று கிடைக்கும் நாள். ஆனால், புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சிலருக்கு வெளியூர்களில் இருக்கும் கோயில்களை தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும். வியாபாரம் வழக்கம் போலவே நடைபெறும்.

**மிதுனம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவம் நடைபெறும். உறவினர்கள் வருகையால் சுப நிகழ்ச்சிக்கான பேச்சு அனுகூலமாக முடியும். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும், சுபச் செலவாக இருக்கும் .

**கடகம்:** தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகமாக இருப்பீர்கள். உறவுகளால் ஆதாயம் உண்டாகும். மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும். எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். பணியாளர்கள் ஒத்துழைப்பார்கள்.

**கன்னி:** எதிர்பாராத செலவுகள் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சிலர் கடன் வாங்கவும் நேரிடும். மற்றவர்களிடம் பேசும்போது நிதானம் அவசியம். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. அலுவலகப் பணிகளில் மிகுந்த கவனம் தேவை.

**துலாம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றி பெறும் நாள். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகம் உண்டாகும். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும்.

**விருச்சிகம் :** எதிலும் நிதானமாகச் செயற்படவும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம்.

**தனுசு:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தந்தையின் தேவையை பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் சென்று வரும் வாய்ப்பு ஏற்படும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் மறையும்.

**மகரம்:** திடீர் செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்து விடுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் வெளியூரில் உள்ள கோயில்களைத் தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படும். உணவு விடயத்தில் கவனம் தேவை. ஆரோக்கியம் மேம்படும்.

**கும்பம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உடல் நலனில் கவனம் தேவை. தேவையற்ற அலைச்சலும் ஏற்படக்கூடும். ஆதாயமும் உண்டாகும்.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். புதிய முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். ஆதாயம் உண்டாகும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். அலுவலகத்தில் எதிர்பாராத சலுகை கிடைப்பதற்கு வாய்ப்பு ஏற்படும்.



# மோசமான நிலையில் அக்கரைவெளி வீதி!

முல்லைத்தீவு, மார்ச் 10

கொக்குத்தொடுவாய், கோட்டைக்கேணி பிள்ளையார் கோவில் அக்கரைவெளி வரையான வீதி போக்குவரத்துச் செய்யவேமுடியாத நிலையில் சீரமைப்பின்றிக் காணப்படுகின்றது என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

கொக்குத்தொடுவாய், கொக்கிளாய், கருநாட்டுகேணி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களின் 3 ஆயிரம் ஏக்கர் வரையிலான வயல் நிலத்துக்கு உள்ளீடுகளையும், விளைச்சலையும் கொண்டு சென்று வருவதற்குப் பயன்படுத்தும் பிரதான வீதியாக இந்த வீதி காணப்படுகின்றது.

அண்மையில் பெய்த மழையால் வீதி மிகவும் மோசமாக சேதமடைந்து வீதியின் பல இடங்களில் குழிகளும் ஏற்பட்டுள்ளன.

இந்தநிலையில் குறித்த வீதியின் நிலைமை தொடர்பில் விவசாயிகளால் வடக்கு மாகாண ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டதையடுத்து வடக்கு ஆளுநர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டார்.

குறித்த வீதியைப் புனரமைப்பது தொடர்பில் உரிய திணைக்களங்களுடன் கலந்துரையாடி விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆளுநர் விவசாயிகளிடம் தெரிவித்தார். (ச-28)



# ஒன்றோடொன்று மோதி 3 வாகனங்கள் விபத்து

யாழ்ப்பாணம், மார்ச் 10

யாழ்ப்பாணத்தில் இருந்து கொடிகாமம் நோக்கிச் சென்ற மூன்று வாகனங்கள் ஒன்றோடு ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று நடந்துள்ளது.

இந்த விபத்தில் எவருக்கும் காயங்கள் ஏற்படாத போதிலும் வாகனங்கள் சேதமடைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-28)

# கோழி, முட்டை விலையுயர்வு

கொழும்பு, மார்ச் 10

சந்தையில் முட்டை மற்றும் கோழி இறைச்சியின் விலைகள் மீண்டும் அதிகரித்துள்ளதாக அகில இலங்கை கோழிப்பண்ணை வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்கம் வாக்குறுதியளித்தபடி கோழித் தீவனத்தின் விலையைக் குறைக்காததால் நாடளாவிய ரீதியில் எதிர்வரும் புத்தாண்டு பண்டிகைக் காலத்தையொட்டி கோழி மற்றும் முட்டைகளின் விலை அதிகரித்துள்ளதாகக் கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

# இசைநாடக பயிலரங்கு

யாழ்ப்பாணம், மார்ச்.10

யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகம் நடத்தும் இசைநாடகப் பயிலரங்கு எதிர்வரும் 13ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை இணுவில் கந்தசுவாமி கோவில் அருகாமையிலுள்ள இளந்தொண்டர் சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நாடகம் அரங்கியல் மாணவர்கள் மற்றும் ஆர்வலர்கள் (ஆண்கள் மட்டும்) பங்குபற்ற முடியும். மேலதிகத் தகவல்களுக்கு 07786 45971 எனும் வட்ஸ் அப் இலக்கத்துடன் தொடர்புகொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ச-41)

# செயற்பட்டு மகிழ்வோம்

யாழ்ப்பாணம், மார்ச் 10

யாழ். கைதடி சேதுகாவலர் வித்தியாலயத்தின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு பாடசாலை அதிபர் செல்லத்துரை ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அமபலவாணர் லோகநாதன், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சிக் கல்வி வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் நடராசா ஸ்ரீகாந்தா, கனடா சமூக சேவை செயற்பாட்டாளரும் மனித உரிமை சட்ட ஆலோசகருமான திருமதி.எம்.எஸ்.சித்திரா தேவி சுப்பிரமணியம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-41)



# மருதடி விநாயகர் மஹோற்சவம் முன்னாயத்தக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 10

வரலாற்றுப் பிரசித்திபெற்ற மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய மஹோற்சவ முன்னேற்பாட்டுக் கூட்டம் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலாளர் திருமதி.சுபாஜினி மதியழகன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் ஆலயத்தினுடைய நிர்வாகத்தினர், மானிப்பாய்ப்பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, கிராம அலுவலர், சம்பந்தப்பட்ட திணைக்களங்களைச் சேர்ந்த அதிகாரிகள் மற்றும் கலாசாரப் பிரிவில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 22 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-25,66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




நாளொரு நல்வார்த்தை

நட்சத்திரங்களைப் பறிக்க கையை நீட்டுகிற மனிதன் தன் காலருகே பூத்திருக்கும் மலர்களை மறந்துவிடுகிறான்.

—ஜெர்மிபென்தாம்—

## பட்டாம்பூச்சித் தத்துவமும் தேங்காயும்

சிறிய மாற்றங்கள் பெரிய மற்றும் சிக்கலான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்பது பட்டாம்பூச்சிக் கோட்பாடு ஆகும். ஒரு சிறிய பட்டாம்பூச்சியின் சிறகசைப்பின் விளைவால் ஒரு பெரும்புயலே ஏற்படாலாம் என்ற கருதுகோளின் அடிப்படையிலேயே இதற்கு 'பட்டாம்பூச்சிக் கோட்பாடு' என்று பெயரிட்டனர். ஒரு நிகழ்வில் இருந்து உருவாகி சங்கிலித்தொடர் போல நீளும் இந்த விளைவுகளால் நினைத்துப்பார்க்கமுடியாத அசம்பாவிதங்கள் உண்டாகலாம். இதற்கு மிக அண்மைய உதாரணம் கொரோனா. எங்கேயோ உள்ள சீனாவில் ஒரு விஞ்ஞான ஆய்வுகூடத்தில் நிகழ்ந்த விபத்தால் வெளியேறிய கொரோனா வைரஸ், உலகம் முழுதையும் ஆட்டிப்படைத்தது. அப்படித்தான் இப்போது தேங்காய்த் தட்டுப்பாடும் அதனால் உண்டாகும் பட்டாம்பூச்சி விளைவுகளும் முழு இலங்கையையும் ஆட்டிப்படைக்கத் தொடங்கிவிட்டன.

இந்த அரசாங்கம் குரங்குகள் மீது பழிபோட்ட தேங்காய்த்தட்டுப்பாட்டுக்கு உண்மையான காரணங்கள் வேறு. இலங்கைக்கு விஜயன் வரமுதலே குரங்குகள் இங்கே இருக்கின்றன. அப்படி இலங்கையின் பூர்வீக விலங்குகளில் ஒன்றான குரங்குகளால் இத்தனை நாளும் வராத தட்டுப்பாடு இப்போது மட்டும் எப்படி வந்தது என்று இந்த அரசாங்கம் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். போரால் முண்டமான தென்னைமரங்களுக்கு இதுவரை மாற்றீடாக புதிய தென்னைகள் வளர்த்தெடுக்கப்படவில்லை. அதைவிட பாரம்பரியமாக தென்னைத் தோட்டங்கள் செய்யப்பட்டுவந்த காணிகளில் இப்போது தொழிற்சாலைகளும், அடுக்குமாடிகளும் நிரம்ப, தென்னந்தோப்புகள் அருகிக்கொண்டே செல்கின்றன. முன்னைய காலங்களில் வீட்டுக்கு வீடு இருந்த தென்னை மரங்களும் இப்போதில்லை. போதாக்குறைக்கு வெள்ளை ஈக்களின் ஓயாத அலைகள் நடவடிக்கையால், தென்னையின் வளம் உறிஞ்சப்பட்டு, மெலிந்துபோய், விளைச்சல் குறைகின்றது. இப்படியெல்லாம் பல காரணிகளின் கூட்டு விளைவாகவே இப்போது தேங்காய்த்தட்டுப்பாடு விஸ்வரூபமெடுத்திருக்கின்றது.

உணவுத் தேவையைப்பூர்த்திசெய்வதிலும், எண்ணெய் உற்பத்தியிலும் தேங்காய்த் தட்டுப்பாடு ஏற்படுத்திய தாக்கத்தின் முதல் விளைவாக இப்போது நான்கரை லட்சம் பேர் முழுநேரமாகவோ அல்லது பகுதிநேரமாகவோ வேலையிழந்திருக்கிறார்கள். இந்த வேலையிழப்பு இனி அவர்களின் குடும்பங்களில் தாக்கம்செலுத்தி, அவர்களை பொருளாதாரத்தில் உடனடியாக நலிவிழக்கவைக்கும். அந்தப் பொருண்மிய நலிவடைவு இலங்கைப் பொருளாதாரத்தையும் பாதிக்கும். அத்தோடு தேங்காய்த் தட்டுப்பாட்டால் இன்னும் பல உற்பத்தித்துறைகளிலும் பாதிப்பு ஏற்பட்டு, அதனாலும் இன்னும் சில ஆயிரம் பேர் தொழில்வாய்ப்பை இழக்கும் அபாயமும் உண்டு. இப்படி படிப்படியாக தேங்காய்த்தட்டுப்பாடு வெவ்வேறு துறைகளில், வெவ்வேறு ரூபங்களில் உண்டாக்கும் பாதக விளைவுகள் நாட்டின் எல்லாக் குடும்பங்களிலும் ஓர் அதிர்வை உண்டாக்கவும் சந்தர்ப்பங்கள் அதிகம். ஏனெனில் இலங்கையரின் உணவுப்பழக்கத்தில் அரிசிக்கு அடுத்தபடியாக தேங்காயும், தேங்காய் உற்பத்திகளுமே முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன. அதனால் இந்தத் தட்டுப்பாட்டை நீக்க, தேங்காய் இறக்குமதி என்பது நிரந்தரமான ஒன்றாக மாறிவிடும். இலங்கையின் பணப்பயிர்களில் ஒன்றென அடையாளப்படுத்தப்பட்ட தென்னையை நாங்கள் மறந்துபோக, பிரதான இறக்குமதிப் பண்டமாக தேங்காய் உருவெடுக்கும். இந்த நிலையைத் தடுக்க இப்போதைக்குள்ள தற்காலிக வழி, வெள்ளை ஈக்களின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதே. அதன்மூலம் ஓரளவுக்கு தேங்காய் விளைச்சலை அதிகரித்து, கொஞ்சமேனும் தட்டுப்பாட்டைக் குறைக்க முடியும். ஆனால் அது நிரந்தரத் தீர்வாகாது. உடனடியாக வீட்டுக்கு வீடும், வெற்றுக்காணிகளிலும் தென்னங்கன்றுகளை நடுகை செய்யவேண்டும். அதிலும் குறைந்தகாலப் பகுதியின் பயன்தரக்கூடிய தென்னை இனங்களைத் தெரிவு செய்தால், நான்கைந்து வருடங்களில் தேங்காயில் தன்னிறைவை எட்டிவிடலாம். அதைவிடுத்து குரங்கில் பழிபோட்டுக்கொண்டு அரசாங்கம் வாளாவிருந்தால்,எந்த முன்னேற்றமும் ஏற்படப்போவதில்லை.




உள்ளூராட்சித் தேர்தல்

## வேட்புமனுத் தாக்கலின்போது சொத்து விவரம் கட்டாயம்

**கொழும்பு, மார்ச் 10**

**உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்காக வேட்புமனுத் தாக்கல் செய்யும் சகல வேட்பாளர்களும் தங்களது சொத்து மற்றும் பொறுப்புகள் தொடர்பான அறிக்கையையும் சமர்ப்பிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

தேர்தல்கள் செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் பின் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், வேட்புமனுத் தாக்கல் செய்யப்படும்போது, அதில் 25 சதவீதமானோர் பெண் வேட்பாளர்களாக இருக்கவேண்டும் என்ற சட்டம் நடைமுறைப்படுத்தப்படும். அதேநேரம், வேட்புமனுவில் 25 சதவீதம் இளைஞர்களுக்கு வாய்ப்பளிக்கப்படவேண்டும். அவர்கள் 18 வயது முதல் 35 வயதுக்கு இடைப்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

எனவே, வேட்புமனு தயாரிப்பின் போது, அரசியல் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் மிகுந்த அவதானம் செலுத்தவேண்டும்-என்றார். (ச-இ)



## முக்கொலை துப்பாக்கிச்சூடு மற்றொருவர் கைது

கொழும்பு, மார்ச் 10

மித்தெனிய முக்கொலையுடன் தொடர்புடைய மற்றொரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குட்டிகல படலங்கலப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போதே குறித்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. இந்தக் கொலையுடன் சம்பந்தப்பட்ட 11 சந்தேகநபர்கள் இதுவரை கைதுசெய்யப்பட்டுள்ளனர். கடந்த பெப்ரவரி மாதம் 18ஆம் திகதி கஜா என அழைக்கப்படும் அருண விதானகமகே அவரது மகன் மற்றும் மகள் ஆகியோர் மோட்டார்சைக்கிளில் பயணித்தபோது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் மூவரும் உயிரிழந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## ஹெரோய்னுடன் இளம்பெண் கைது

திவுலபிட்டிய ஹொரகஸ்முல்ல பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய இளம்பெண் ஒருவர் ஹெரோய்ன் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த பெண்ணிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஹெரோய்ன்போதைப் பொருளின் பெறுமதி சுமார் 2 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா என காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். குறித்தபெண்ஹெரோய்ன் கடத்தலில் ஈடுபட்டு வந்துள்ளாரென முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ச-இ)

## மேலதிக வகுப்புகள் நாளையுடன் தடை

கொழும்பு, மார்ச் 10

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சார்த்திகளுக்கான மேலதிக வகுப்புகள் நாளை 11 ஆம் திகதி நள்ளிரவுடன் தடைசெய்யப்பட்டுள்ளன என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது. இந்த ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் 17 ஆம் திகதி ஆரம்பமாகி 26 ஆம் திகதி நிறைவடைய உள்ளது.

அதன்படி விதிகளை மீறி மேலதிக வகுப்புகள், கருத்தரங்குகளை நடத்துவோருக்கு எதிராகக் கடும்நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் பரீட்சைகள் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ச-இ)



## பழுதுபார்க்கும் மையமாக மத்தள

சர்வதேச மத்தள விமான நிலையத்தை விமானம் பழுதுபார்க்கும் மையமாக மாற்றுவது குறித்து அரசாங்கம் கவனம்செலுத்தி வருவதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். மத்தள விமானநிலையம் சுமார் 36.5 பில்லியன் ரூபா செலவில் கட்டப்பட்டது. கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்த விமான நிலையத்துக்காக 38.5 பில்லியன் ரூபா செலவுசெய்யப்பட்டுள்ளது.

அதனால் இந்த நிறுவனத்தை இலாபம் ஈட்டும் ஒரு நிறுவனமாக மாற்றுவதற்கு எதிர்பார்க்கிறோம் என்றும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார். (ச-இ)


செய்தி : 021 493 0000

விளம்பரம் : 021-493 1111

செய்தி : news@uthayan.com

விளம்பரம் : advt@uthayan.com


நாளை

செவ்வாய்க்கிழமை - மாசி - 27

11.03.2025

சுபநேரம் : 03.23 - 04.53

ராகுகாலம் : 10.53 - 12.23


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தமிழரசுக்கட்சி அலுவலகம் வவுனியாவில் நேற்று திறப்பு

வவுனியா மார்ச் 10

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மாவட்ட அலுவலக மும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களின் மக்கள் தொடர்பாடல் காரியாலமும் வவுனியா குருமன் காடு காளிகோவில் வீதியில் நேற்று திறந்துவைக்கப் பட்டது. நிகழ்வில் அதிதிகளாக கலந்துகொண்ட கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே. சிவஞானம், பதில் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் ஆகியோர் புதிய அலுவலகத்தை திறந்துவைத்தனர்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர்களான து.ரவிகரன்,க.கோடீஸ்வரன்,ஞா.சிறிநேசன், குகதாசன்,சிறிநாத்,இ.சாணக்கியன், மற்றும் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள், கட்சியின் மத்தியகுழு உறுப்பினர்கள், மாவட்டக்கிளையினர் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-110)

# கலைஞர்களை வாழவைத்து தேசத்தைக் கட்டியெழுப்புவோம்

### பிரதமர் ஹரிணி தெரிவிப்பு



**கொழும்பு, மார்ச் 10**

**ஒரு சிறந்த தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு நீண்டகால முதலீடுகளைச் செய்து கலைஞர்களை ஊக்குவித்து கலைப் பாரம்பரியத்தை பாதுகாக்க வேண்டும் என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

அலரி மாளிகையில் நடைபெற்ற 44 ஆவது இளைஞர் விருது விழாவில் பங்கேற்று உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கலையோடு வளரும் பிள்ளைகள் எதிர்காலத்தில் முழுமையான மனிதர்களாக மாறுகிறார்கள். அவர்கள் இயல்பாகவே ஒருவர் மற்றவருடைய குணங்களை அடையாளம் கண்டுகொள்ளும் கற்பனைத்திறன் கொண்டவர்களாக மாறுகிறார்கள். இன்று உயர் கலை படைப்பாளிகளின் பற்றாக்குறை உள்ளது. கடந்த கால கலைஞர்கள் தமது படைப்பாற்றல் மற்றும் திறமையின் அடிப்படையில் படைப்புகளை உருவாக்கினர். பணம் என்பது அடிப்படைத் தேவையாக இல்லாத ஒரு காலம் இருந்தது. ஆனால் பணம் இல்லாமல் இன்று படைப்புகளைச் செய்ய முடியாது. இன்று பல்வேறு சூழ்நிலைகளால் கலையின் மூலம் வாழ்வது கடினமான சூழ்நிலையாக மாறியுள்ளது. அந்த நிலையை நாம் மாற்ற வேண்டும்.

தேசிய இளைஞர் சேவை மன்றம் இந்தச் சேவையை வளர்த்தெடுக்க வேண்டும். அரங்கியல், சினிமா மற்றும் சின்னத்திரையில் தங்கள் கலைத்திறனை வெளிப்படுத்தும் பல சிறந்த கலைஞர்கள் நாட்டில் உருவாகியுள்ளனர்.

எனவே கலையின் மூலம் வாழும் நிலை மீண்டும் இந்த நாட்டில் உருவாக்கப்பட வேண்டும்.

இதற்காக அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும் - என்றார். (ச-26)

## கால்நடைகளைக் கட்டி வளர்க்கவும்

சிறுதானியப் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் கால்நடை வளர்ப்போர் தமது கால்நடைகளைக் கட்டிவளர்க்கவேண்டும் என்று கமக்கார அமைப்புகள் அறிவுறுத்தியுள்ளன.

யாழ்.குடாநாட்டு வயல்களில் நெல் அறுவடைக்குப் பின்னர் சிறுதானியச் செய்கையில் செய்கையாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். அநேகமான வயல் நிலங்களில் உழுந்து, பயறு உள்ளிட்ட சிறுதானியங்கள் விதைப்புச் செய்யப்பட்டுள்ளன.

சிலர் தமது கால்நடைகளை வயல்நிலங்களை அண்டிய பகுதிகளில் மேய்ச்சலுக்காக விட்டுச் செல்கின்றனர். இதனால் அவை வயல் நிலங்களுக்குள் புகுகின்றன. எனவே கால்நடைவளர்ப்பவர்கள் தமது கால்நடைகளைக் கட்டி வளர்க்காவிடின் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று கமக்கார அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன. (ச-41-17)

## வெளிநாட்டுசிகரெட்டுகளுடன் ஒருவர் கைது

கொழும்பு, மார்ச் 10

சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட 13ஆயிரம் சிகரெட்டுகளுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் வருகை முனையத்தில் வைத்து, பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியக விமான நிலையப் பிரிவின் அதிகாரிகளால் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். (ச)

## யூடியூப்பரின் அநாகரிகம் ம.உ.ஆணைக்குழு தலையீடு

யாழ்ப்பாணம், மார்ச் 10

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல யூடியூப்பர் ஒருவர், ஏழ்மையான குடும்பம் ஒன்றுக்கு உதவுவதாகக் கூறி அவர்களின் வீட்டுக்குள் நுழைந்து அங்கு மாணவி ஒருவரைக் கட்டாயப்படுத்திக் காணொலி எடுக்கமுயன்ற சம்பவம் தொடர்பிலான விவரங்களை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கோரியுள்ளது.

வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பங்களுக்கு உதவி செய்வதாகக் கூறி குறித்த நபர் பல காணொலிகளை வெளியிட்டு வருகிறார். அதிகமாக புலம்பெயர்ந்தோரிடம் பணத்தைப் பெற்று இந்த உதவிகளைச் செய்து வருவதாக அவர் காணொலிகளில் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் யாழ்ப்பாணத்திலுள்ள குடும்பம் ஒன்றுக்கு உதவி செய்வதாகத் தெரிவித்து குறித்த யூடியூப்பர் பெண்ணொருவரின் வீட்டுக்குள் நுழைந்து அங்கிருந்த மாணவியொருவரை வலுக்கட்டாயமாக காணொலி எடுக்க முயன்றுள்ளார்.

மாணவி அதற்கு மறுத்ததால் கடுமையான வார்த்தைப் பிரயோகங்களிலிலும் அவர் ஈடுபட்டுள்ளார்.

இந்தக் காணொலி சமூக ஊடகங்களில் பரவிவரும் நிலையில் குறித்த நபர் மற்றும் குறித்த குடும்பம் தொடர்பிலான விவரங்களை வழங்குமாறும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கோரியுள்ளது. (ச-இ)

## அன்றாட உடற்பயிற்சி உடலுக்கு அவசியம்!

### மருத்துவர் சத்தியமூர்த்தி சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், மார்ச் 10

நாம் ஒவ்வொருவரும் உடற்பயிற்சியை எங்களின் நாளாந்தக் கடமைகளில் ஒன்றாக மேற்கொள்வது அவசியமானது என யாழ். போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் விரிவுரையாளர்களிடையே உடல் ஆரோக்கியத்தைப் பேணும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட நடைப் பயிற்சிக் கழக அங்குரார்ப்பண நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னைய காலத்தவர்கள் அன்றாடக் கடமைகளூடாக உடலுக்கான பயிற்சியை வழங்கினர். ஆனால் தற்போதைய தலைமுறையினர் வியர்வை சிந்தும் பணிகளை ஆற்றுவது குறைந்துள்ளது.

குறிப்பாக நாற்பது வயதைக் கடந்தோருக்கு இடுப்பு எலும்பு, முழங்கால் எலும்பு, கணுக்கால் மூட்டு ஆகியனவும் இவற்றுக்கு இடையிலான தசைப் பகுதியும் மிக முக்கியமானவை. இவற்றைப் பாதுகாப்பதற்கு உடற்பயிற்சி மிக அவசியமாகும். எம் உடலை எப்போதும் சுறுசுறுப்பாக வைத்திருப்பதற்கு உடற்பயிற்சி நிச்சயம் உறுதுணை புரியும். நடக்கலாம், ஓடலாம் அல்லது ஒரே இடத்தில் நின்றவாறு தசைகள், மூட்டுகளுக்குரிய பயிற்சிகளைச் செய்யலாம். எனவே நாம் ஒவ்வொருவரும் உடற்பயிற்சியை எங்களின் நாளாந்தக் கடமைகளில் ஒன்றாக மேற்கொள்வது அவசியமானது - என்றார். (ச-22,66)

## தையிட்டி விகாரைக்கு எதிராக புதனன்று மீண்டும் போராட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 10

யாழ். தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரை அமைந்துள்ள காணி மற்றும் அதனைச் சூழவுள்ள காணிகளைக் காணி உரிமையாளர்களிடம் வழங்குமாறு வலியுறுத்தித் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் மீளவும் தொடர் போராட்டம் நாளை மறுதினம் புதன்கிழமை மாலை 04 மணியளவில் ஆரம்பமாகி முன்னெடுக்கப்படவுள்ளது. பூரணை நாளான எதிர்வரும் வியாழக்கிழமை மாலை 6.30 மணியளவில் இந்தப் போராட்டம் நிறைவடையும்.

அனைத்துக் கட்சியினர், பொதுமக்கள் மற்றும் ஆதரவாளர்களைக் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு வலுச் சேர்க்குமாறு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் கேட்டுள்ளார். (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுரவின் அரசாங்கம் சொல்வதெல்லாம் பொய்

சம்பிக்க சுட்டிக்காட்டு

**கொழும்பு, மார்ச் 10**

**தற்போதைய அரசாங்கத்தின் பொய் வாக்குறுதிகளால் மக்கள் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளனர் என்று ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போதைய அரசாங்கம் தனது வாக்குறுதிகளை மீறிவிட்டது. ஆட்சிக்கு வந்ததும் எரிபொருள் மீதான வரிகளை நீக்குவதாக உறுதியளித்துவிட்டு இன்னும் அதை நிறைவேற்றவில்லை.

மின்சாரக் கட்டணங்களை மூன்றில் ஒரு பங்கால் குறைப்பதாக உறுதியளித்தது. ஆனால் இலங்கை மின்சாரசபை நட்டத்தில் இயங்குவதாக கூறப்படுகிறது.

அத்தியாவசிய உணவுப்பொருள்களுக்கு வரி விதிக்கமாட்டோம் என்று வாக்குறுதிகள் வழங்கப்பட்டபோதிலும், ஒரு கிலோ அரிசிக்கு 65 ரூபா வரி விதிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அரசாங்கம் பொய்களைச் சொல்லி மக்களை ஏமாற்றுகின்றது. மத்திய வங்கி மோசடியின் சந்தேக நபரான அர்ஜுன மகேந்திரனை நாட்டுக்கு அழைத்து வருவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டபோதிலும் அவர் அழைத்து வரப்படவில்லை. அதேபோல் தேசபந்துவும் கைதுசெய்யப்படமாட்டார் - என்றார். (ச-இ)

# இழப்பீட்டுத்தொகைக்கு மேலதிகமாக வீடுகள்!

*முன்னாள் எம்.பி.க்கள் சுகபோகம்*

கொழும்பு, மார்ச் 10

இழப்பீட்டுத் தொகைக்கு மேலதிகமாக அரசாங்கத்திடம் வீடுகளைப் பெற்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

அரகலயப் போராட்டத்தின்போது வீடுகள் எரிக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட இழப்பீட்டுத் தொகைக்கு மேலதிகமாக அரசாங்கத்தின் வியத்புர வீட்டுத் தொகுதியில் வீடுகள் பெறப்பட்டுள்ளதாக வீடமைப்பு பிரதி அமைச்சர் டி.பி. சரத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய அவர்,

வியத்புர வீர மாவத்தையில் அமைந்துள்ள இந்த வீட்டுத்தொகுதியில் வீடுகளை வழங்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அப்போதைய சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதன்படி, வியத்புர வீடமைப்புத் தொகுதியிலிருந்து 26 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. சாதாரண திட்டத்தைத் தவிர்த்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஆரம்பக் கொடுப்பனவு 25% ஆகக் குறைக்கப்பட்டு, மீதியை 15 வருடங்களில் செலுத்தும் முறைமை ஏற்படுத்தப்பட்டு வீடுகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# தென்னக்கோனின் சொத்து அரசுடைமை?

கொழும்பு மார்ச் 10

பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தொடர்ந்தும் தலைமறைவாக இருப்பதனால் அவரது சொத்துகளை அரசுடைமையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனப் பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

வெலிகமவில் போதைப்பொருள் கடத்தல் தொடர்பாக ஒரு சந்தேகநபரைக் கைதுசெய்யச் சென்றபோது, வெலிகம பொலிஸார் நடத்தியதாகக் கூறப்படும் துப்பாக்கிச் சூட்டில் கொழும்பு குற்றப்பிரிவைச் சேர்ந்த பொலிஸ் சார்ஜன்ட் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக, மாத்தறை நீதிவான் நீதிமன்றம் முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனைக் கைதுசெய்ய உத்தரவு பிறப்பித்திருந்தது.

அவர் தலைமறைவாகியுள்ள நிலையில் அவரைக் கைதுசெய்யக் குற்றப் புலனாய்வுத் துறையின் சிறப்பு அதிகாரிகள் அடங்கிய பல குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)


# உடைமையில் துப்பாக்கி உட்பட பல குற்றங்களுடன் தொடர்புடைய ஐந்து பேர் வவுனியாவில் கைது!

வவுனியா, மார்ச் 10

உள்நாட்டுத் துப்பாக்கிகள் மற்றும் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள்களுடன் வவுனியாவில் ஐந்து பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து பாவற்குளம் படிவம் 2 பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு நடவடிக்கையின்போது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இரண்டு துப்பாக்கிகள் இருவேறு இடங்களில் இருந்து மீட்கப்பட்டன. அவற்றை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களில் ஒருவரின் உடைமையில் இருந்து கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளது. அத்துடன், நீதிமன்றினால் இரண்டு பிடியாணை விதிக்கப்பட்ட நிலையில் தலைமறைவாக இருந்த 25 வயதுடைய இளைஞர் ஒருவரும் இதன்போது கைதுசெய்யப்பட்டார். குறித்த மூவரும் வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸாரால் உளுக்குளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அத்துடன், மாடுதிருடிய குற்றச்சாட்டில் நீதிமன்ற விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்காத மேலும் இருவரும் கைதுசெய்யப்பட்டனர். அனைவருக்கும் எதிராக மேலதிக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம-110)



# பெற்றோரின் பிளவுகளால் பாதிப்புறுவது சிறுவர்களே!

*நீதியமைச்சர் சுட்டிக்காட்டு*

கொழும்பு, மார்ச் 10

சமூக கட்டமைப்பில் சிறுவர்கள் பல நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கு பிளவுபட்ட குடும்ப நிலை பிரதான காரணியாக அமைகிறது. இதுதொடர்பில் பெற்றோர் கூடிய அவதானம் செலுத்தவேண்டும் என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு நிலையங்களில் உள்ள சிறுவர்களின் பின்னணியை ஆராய்ந்து பார்க்கையில் பிளவுபடுத்தப்பட்ட குடும்ப நிலை இருப்பது காணமுடிகிறது.

பெண்களை மதிப்பது தொடர்பில் ஆண் பிள்ளைகளுக்கு கற்பிக்கும் பொறுப்பு பெற்றோருக்கு உண்டு. ஓர் ஆண்மகன் பெண்களை மதித்து சிறந்த முறையில் நடந்துகொண்டால் சமூகத்தில் பல பிரச்சினைகளைத் தவிர்த்துக்கொள்ளலாம் - என்றார். (ச-இ)

# முத்தையா முரளிதரனுக்கு காஷ்மீரில் நிலம் ஒதுக்கீடு

சட்டசபையில் சர்ச்சை

கொழும்பு, மார்ச் 10

இலங்கை அணியின் முன்னாள் வீரர் முத்தையா முரளிதரனின் சிலோன் பெவெரேஜர்ஸ் நிறுவனத்துக்கு காஷ்மீரில் இலவசமாக 25 ஏக்கர் நிலத்தை மாநில அரசாங்கம் ஒதுக்கியுள்ள விடயம் பேசுபொருளாகியுள்ளது.

இதுதொடர்பாக ஜம்மு காஷ்மீர் சட்டமன்றத்தில் கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன.

நில ஒப்பந்தம் குறித்து தெளிவுபடுத்தக் கோரி சிபிஎம் சட்டமன்ற உறுப்பினர் முகமது யூசுப் தாரிகாமி சட்டமன்றத்தில் கேள்வி எழுப்பியதை அடுத்து இந்த விவகாரம் வெளிச்சத்துக்கு வந்தது.

அத்துடன் காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் குலாம் அஹமட், ஒரு சதம் கூட பெறாமல் இலங்கையின் முன்னாள் வீரர் ஒருவருக்கு நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. இது பாரதூரமான விடயம். இதுகுறித்து சட்டசபையில் விவாதம் இடம்பெறவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நிலம் ஒதுக்கப்பட்டுள்ளதை ஏற்றுக்கொண்டுள்ள விவசாய அமைச்சர் இந்த விவகாரம் வருமானத் திணைக்களத்தின் கீழ் வருவதாகவும் எனினும் இது குறித்து ஆராய்வதாகவும் தெரிவித்துள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## டிராக்டரைத் திருத்த 9 இலட்சம் ஒதுக்கீடு

யாழ்., மார்ச் 10 புங்குடுதீவு கமநல சேவைகள் நிலையத்துக்குச் சொந்தமான பழுதடைந்த உழவு இயந்திரத்தை திருத்துவதற்கு 9 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் அஞ்சனா சிறீரங்கன் தெரிவித்துள்ளார். புங்குடுதீவு கமநல சேவைகள் நிலையத்துக்குச் சொந்தமாக இரண்டு உழவு இயந்திரங்கள் காணப்படும் நிலையில் அவற்றில் ஒன்று பழுதடைந்துள்ளது என அண்மையில் இடம்பெற்ற மாவட்ட விவசாயக் குழுக்கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்ட போது அவர் இதனைத் தெரிவித்தார். (ச-125)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 06.09.1962 — மறைவு 09.02.2025

### அமரர் திரு. இராசநாயகம் பாரதி

(மூத்த ஊடகவியலாளர்)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர் திரு. இராஜநாயகம் பாரதி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (11.03.2025) செவ்வாய்க்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். எதிர்வரும் (13.03.2025) வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு **ஹம்சியா மஹாலில் (A1 ராஜா கிரீம் ஹவுஸ். 37 இராமநாதன் வீதி. திருநெல்வேலி)** மலர் அஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நடைபெறும்.

ஆத்ம சாந்திப்பிரார்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி வாயிலாகவும் சமூக வலைத்தளங்களின் ஊடாகவும் ஆறுதல் கூறியவர்களுக்கும். எங்கள் பெருந்துயரில் எங்களோடு சேர்ந்து பல்வேறு வழிகளில் உதவி புரிந்த அனைத்து உற்றார். உறவினர். நண்பர்கள் ஊடகத் துறையினர் அனைவருக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பாக உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**குடும்பத்தினர்**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 23 . 09 . 1985 — மறைவு 21 . 02 . 2024

எமது அன்புச் செல்வி

### தாரிணி திருநாவுக்கரசு

திதி : பூர்வபக்க துவாதசி (10.03.2025)


அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவாக இன்று (10.03.2025) திங்கட்கிழமை இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

33, பருத்தித்துறை வீதி,
வல்வெட்டித்துறை.

(CR/44476) J-1

குடும்பத்தினர்
077 656 0581

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் ஞானசூரியர் சிவக்குமரன்


(முன்னாள் வடமாகாண விளையாட்டுத்துறை திணைக்கள அமைய அலுவலர்)

**திதி– பூர்வபக்க ஏகாதசி (10.03.2025)**

**நினைவுநாள்–02.03.2025**

நினைவுகள் சுமந்துவர
நிழலாக நீ தொடர(க்)
கனலாகும் எம் இதயம்
கதறியழப் பலமின்றி(ப்)
பரமனடி சென்றுறங்கும்
எம் பதிக் குமரனுக்கு !
கோபுரமாய் நீ உயர்ந்து
கணப் பொழுது கடந்து
காலமது விரைந்து
ஈராண்டு நினைவலையில்
எம்மோடு உறவாடும் - எம்
இதய இளவரசே இங்கே
ஒரு கணம் எம்மை வந்து பாராயோ - என
ஏங்கிப் புலம்பினாலும்
பூச்சிய வாழ்வு தனில் - பூச்சியத்திற்குள்ளே
ஒரு இராச்சியத்தையாளும் எம்மிறைவன்
கழலடியை ஏகாதசியில் பெற்றவனே எம் குமரா
இறையோடு இரண்டறக் கலந்துறங்கும்
உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி



மண்ணில் 22.02.1982 — விண்ணில் 02.03.2023

பிரிவால் வாடும்
**குடும்பத்தினர்.**

நயினாதீவு - 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் வடக்கு பிரதேசசபை மயிலிட்டி உப அலுவலகம் ஆதனப்பெயர்மாற்ற அறிவித்தல்

விண்ணப்பதார் திருமதி சுந்தரலிங்கம் சற்குணசோதி

வலிகாமம் வடக்கு பிரதேசசபை மயிலிட்டி உப அலுவலகத்திற்கு உட்பட்ட கட்டுவன் வீதி மயிலிட்டி என்னும் முகவரியில் அமைந்துள்ள வீரமாணிக்கதேவன்துறை இறை "என்ற ஆதனம் ஆதனப்பதிவேட்டில் வட்டாரம் 05 ஆதன இலக்கம் 34 மயிலிட்டி கட்டுவன் வீதியில் அமைந்துள்ளது.

குறித்த ஆதனம் பிரசித்த நொத்தாரிஸ் திரு.சந்தோசம் ஜேசுநேசன் முகதாவில் உறுதி இலக்கம் 86ம் இலக்கத்தில் 2019.12.18 அன்று நிறைவேறிய நன்கொடை உறுதியின் பிரகாரம் குறித்த சுந்தரலிங்கம் சற்குணதேவி சொந்தமும் உரிமையுமாய் இருந்து வந்தது.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்கு பகுதி மயிலிட்டி கோவிற்பற்றும் வீரமாணிக்கதேவன்துறை இறை தியாக்கரை இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் ஏ.கந்தசாமி அவர்களின் வரைபட இலக்கம் 5533 இன் படி துண்டு 1ஆகும்.

**இதற்கு எல்லைகள்**

கிழக்கு : துண்டு 2 ஆதனம் துண்டு எனச் சுட்டிய பாதை
வடக்கு : அருமைத்துரை தங்கலிங்கம் கைம்பெண் புவனேஸ்வரி
மேற்கு : செந்தமிழ்குமரன் பெண் ரஜனி சண்முகராஜா பெண் ரஜீனா
தெற்கு : துரைசாமி அருந்தவம் துரைசாமி மகாசிவம்

மேற்குறித்த ஆதனத்தை சுந்தரலிங்கம் சற்குணசோதி என்னும் பெயரில் பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறு யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை,**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)**

(cs 57700) (N-1)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 19 . 07 . 1953



மறைவு 08 . 02 . 2025

**நவரத்தினராஜா பரமேஸ்வரி (ராணி)**

ராஜாவுக்கேற்ற ராணியென
இல்லறத்தை வழிநடத்தி
முத்தென மூன்று பொன்மணிகளை
பெற்றெடுத்து
அவர் வாழ்வு சிறக்க
அனைத்தையும் வழிவகுத்து
பேரக் குழந்தைகளை - தன்
கண்மணியாய்க் காத்து நின்று
ஊரார் பிள்ளைகளை
உன் பிள்ளையாய் வழி நடத்தி
உன் கடமையெல்லாம் முடிந்ததென்று
எம் துயரமறியாமல் கண்துயில சென்றீரோ

காலனவன் உன்னை எம்
கண்மறைத்து கொண்டு சென்றதேனோ
எமைத்தேம்பி அழவிட்டு
நீர் தனியாய் சென்றதேனோ
ஆறாத சோகத்துடன் கண்ணீரால்
விடை தருகிறோம் தாயே!
உம் ஆத்மா சாந்தியடையட்டும்.

சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி.

குடும்பத்தினர்

(cs.57711) (N-1)

## பருத்தித்துறை நகரசபை கழிவகற்றலால் பாதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச்.10

பருத்தித்துறை நகரசபை திண்மக்க ழிவை அகற்றும் இடம் விவசாய நடவடிக்கைக ளுக்கு பாதிப்புகளை ஏற்படுத்துவதாக குடத்தனை கமக்கார அமைப்பினர் யாழ். மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பருத்தித்துறை நகரசபையினால் திண்மக்கழிவுகள் முறையற்ற விதத்தில் கொட்டப்படுவதால் விவசாய நிலங்கள் பாதிக்கப்படுகின்றன. இதனால் சுகாதாரச் சீர்கேடுகளும் ஏற்படுகின்றன. இதனைத்தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். (ச-125)

**தேவை**

வவுனியாவில் அமைந்துள்ள
மருந்தகத்திற்கு மருந்தாளர்கள்
(Pharmacist)
இரண்டுபேர் தேவை.
T.P.: 077 541 4882

(cs. 29082) (N-1)

## சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்(வ-து), சுன்னாகம் 31.07.2024 இல் உள்ளவாறான கிராமிய வங்கி வாடிக்கையாளர்களின் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தல்

சங்கத்தின் 2023/2024 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு நடைபெற்றுக் கொண்டிருப்பதனால் கிராமிய வங்கிகளில் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் தங்களது கணக்கு மீதியினை உறுதிப்படுத்திக் கொள்ள இக்காலத்துக்குரிய கணக்குப் புத்தகங்களுடன் கீழ் குறிப்பிட்ட நாள்களில் சுன்னாகம் மத்திய சந்தையில் அமைந்துள்ள கிராமிய வங்கிக்கு சமுகம் தந்து தங்கள் மீதியினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். மேலும் கணக்குகளை உறுதிப் படுத்தாத வாடிக்கையாளர்களின் மீதிகள் சங்கப் பேரேடுகளின்படி சரியானதென உறுதிப்படுத்தப்படும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.
தொடர்பு தொ.பே.இல:- 0773170720

| கிராமிய வங்கியின் பெயர் | பார்வையிடும் திகதி | பார்வையிடும் நேரம் |
|---|---|---|
| இணுவில் கிராமிய வங்கி | 11.03.2025 - செவ்வாய்க்கிழமை<br>12.03.2025 - புதன்கிழமை<br>ஆகிய இரு தினங்களும் பார்வையிடப்படும் | காலை 09.30 தொடக்கம் பி.ப 03.00 வரை |
| ஏழாலை கிராமிய வங்கி | | |
| குப்பிளான் கிராமிய வங்கி | | |
| சுன்னாகம் கிராமிய வங்கி | | |

**பொதுமுகாமையாளர்**
**சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்.**

(cs 57700) (N-1)



## மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் தேவஸ்தானம்

# பங்குனித்திங்கள் பொங்கல்

## குரோதி வருஷம் - 2025

- குரோதி வருடம் - 2025ம் ஆண்டு பங்குனித்திங்கள் பொங்கல் உற்சவம் 17.03.2025, 24.03.2025, 31.03.2025, 07.04.2025 ஆகிய திங்கட் கிழமைகளில் இடம்பெறவுள்ளது. பொங்கல் உற்சவம் காலை 05.00 மணிக்கு உஷத்காலப் பூசையுடன் ஆரம்பமாகி விஷேட பூசை. காலை. மாலை அபிஷேகம் என்பன இடம்பெற்று இரவு 09.00 மணிக்கு அர்த்தசாமப் பூசையுடன் நிறைவுபெறும்
- பக்தர்கள் வழமை போன்று தங்கள் நேர்த்திக்கடன்வழிபாடுகள். பொங்கல். படையல். அர்ச்சனை என்பவற்றை காலை 05.00 மணி முதல் இரவு 09.00 மணி வரை மேற்கொள்ள முடியும்:

**உற்சவ கால தற்காலிக கடைகள்**

- 15.03.2025 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு உற்சவகால தற்காலிக கடைகளுக்கான இடம் ஆலய வளாகத்தில் வழங்கப்படும். வியாபாரம் செய்ய விரும்புவோர் குறித்த நேரத்தில் பங்குபற்றி தமக்கான இடத்தை பெற்று வாடகைப்பணம் முழுவதையும் செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ள வேண்டும்.
- வியாபாரம் செய்வதற்கென ஆலய நிர்வாகத்தால் ஒதுக்கப்பட்ட இடம் தவிர்த்து ஆலய சூழலில் வழிபாட்டிற்கு இடையூறாக / வீதிகளில் வியாபாரம் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.
- உணவுப்பொருட்கள் விற்பனை செய்வோர் சுகாதாரத் துறையினரின் வழிகாட்டல் மற்றும் அனுமதியை பெற்றே மேற்கொள்ள முடியும்.
- ஆலயத்தின் பெயரால் திருப்பணி / பூசை என் எந்தவொரு நிதி / பொருள் சேகரிப்பிற்கும் உள்நாட்டிலோ / வெளிநாடுகளிலோ எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. ஆலய திருப்பணிக்கு பங்களிப்பு செய்ய விரும்புவோர் ஆலய அலுவலகத்தில் மாத்திரம் வழங்கி பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்ள முடியும்

**சிவ.பஞ்சாட்சரம்**
**தர்மகர்த்தா**

(cs.57705) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரணிலின்...

பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களில் முன்னாள் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவுக்கும் தொடர்புள்ளது என்று குற்றம் சாட்டும் இந்த அறிக்கை, அண்மையில் ரணில் விக்கிரமசிங்க பங்குகொண்ட அல்ஜெஸீரா தொலைக்காட்சியின் நேர்காணலின் பின்னர் பேசுபொருளாகியுள்ளது. இந்த விடயம் பொறுப்புக்கூறலுக்குட்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளும் எழுந்துள்ளன.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகக் குற்றச்சாட்டுகள் காணப்படுவதை ஏற்றுக்கொண்டுள்ள அமைச்சரவைப் பேச்சாளர், 'ரணில் விக்கிரமசிங்க இந்த விடயத்தில் தொடர்புபட்டுள்ளார் என்பது தெரியும், இது அனைவருக்கும் தெரிந்த உண்மை. குற்றச்சாட்டுகளை எங்களால் நிராகரிக்கமுடியாது' என்று தெரிவித்துள்ளார்.

இந்தவிடயத்தில் அரசாங்கம் எவ்வாறான நடவடிக்கைகளை எடுக்கும் என்பது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்க மறுத்துள்ள அமைச்சரவைப் பேச்சாளர், 'அமைச்சரவையில் இது தொடர்பாக ஆராயப்பட்ட பின்னரே தீர்மானம் எடுக்கப்படும்' என்று தெரிவித்துள்ளார்.

அறிக்கையை அடிப்படையாக வைத்து ரணில் விக்கிரமசிங்கவின் குடியுரிமை இரத்துச்செய்யப்படுமா என்ற கேள்விக்குப் பதிலளித்த அவர், அவ்வாறான ஒரு அறிக்கை இருப்பதே நடவடிக்கை எடுப்பதற்குப் போதுமானதாக உள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி.யின் கிளர்ச்சியின்போது ஜே.வி.பி.யினருக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்ட அரசாங்கம் பட்டலந்த வீடமைப்பு திட்டத்தை விசாரணை தடுப்பு முகாமாகப் பயன்படுத்தியது என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

1994ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நியமித்த பட்டலந்த விசாரணை ஆணைக்குழு பட்டலந்த வீடமைப்பு திட்டத்தில் சித்திரவதைகள், சட்டவிரோதமாக தடுத்துவைத்தல், சட்டவிரோத படுகொலைகள் இடம்பெற்றன என்று முன்வைக்கப்பட்ட குற்றச்சாட் டுகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டது.

1997ஆம் ஆண்டு வெளியான ஆணைக்குழுவின் அறிக்கை, பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கு, அந்தக் காலப்பகுதியில் சிரேஷ்ட அமைச்சராக பணியாற்றிய ரணில் விக்கிரமசிங்க உட்படப் பல அரசியல்வாதிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் தொடர்புள்ளது எனத் தெரிவித்திருந்தது.

பட்டலந்தவில் என்ன நடக்கின்றது என்பது ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தெரிந்திருந்தது. அவர் அங்கு சென்று வந்தார் என்று தெரிவித்திருந்த அறிக்கை, ஆனால் அவருக்கு அங்கு இடம்பெற்ற துஷ்பிரயோகங்களுடன் நேரடித் தொடர்பிருப்பதை உறுதிப்படுத்தவில்லை.

பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கு காரணமானவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும், சிவில் உரிமைகளைப் பறித்து நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவேண்டும் என விசாரணைக் குழு பரிந்துரைத்திருந்தது. ஆனால் இந்தப் பரிந்துரைகளை சந்திரிகா அரசாங்கம் நடைமுறைப்படுத்தவில்லை.

இந்த அறிக்கை இன்றுவரை சர்ச்சைக்குரிய விடயமாகக் காணப்படுகின்றது. அந்த அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்காமல் விட்டதன் மூலம் சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் , ரணில் விக்கிரமசிங்கவைக் காப்பாற்றியது என்ற குற்றச்சாட்டுகளும் கடந்த காலங்களில் எழுந்திருந்தன. (அ-எ-இ)

## அத்துமீறிய...

யாழ்ப்பாணம் , பருத்தித்துறை பகுதியைச் சேர்ந்த இந்த இளைஞர், புலம்பெயர் தமிழர்களிடம் நிதியைப் பெற்று வறியவர்களுக்கு உதவிகள் வழங்குவது போன்ற காணொலிகளை தனது யூடியூப் தளத்தில் பதிவேற்றுபவர்.

பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றின் வீட்டுக்கு இரவுநேரம் சென்ற இவர், உதவி வழங்குவதாகத் தெரிவித்து காணொலி எடுக்க முயன்றுள்ளார். அந்த வீட்டில் இருந்த பாடசாலை மாணவி ஒருவரையும் வீட்டின் அறைக்குள் சென்று காணொலி எடுக்க அழைத்துள்ளார். அதற்கு அந்த மாணவி மறுப்புத் தெரிவித்தபோது, நாகரிகமற்ற வார்த்தைகளைப் பயன்படுத்தியுள்ளார். இந்தக் காணொலி சமூக வலைத்தளங்களில் பரவியதை அடுத்துக் கடும் விமர்சனங் கள் எழுந்தன. இவ்வாறான செயற்பாட்டுக்குப் பலரும் கடும் எதிர்ப்புக்களைத் தெரிவித்ததுடன், இவ்வாறான செயற் பாடுகளுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தனர்.

அதேநேரம் இவ்வாறு வெளிநாடுகளில் இருந்து தனிப்பட்ட ரீதியில் பணத்தைப் பெற்று உதவிகள் வழங்குபவர்களின் நிதிக் கையாள்கைகள் தொடர்பாகவும் அவதானம் செலுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தனர். இந்த விடயம் நாடாளுமன்றத்திலும் பேசப்பட்டிருந்தது.

இந்தநிலையில், சம்பவத்துடன் தொடர்புடைய பெண் தலைமைத்துவக் குடும்பத்தினர் பண்டத்தரிப்பில் வசிக்கும் நிலையில், நேற்று அவர்களுடன் சமரசம் பேசி, காணொலி பதிவுசெய்ய யூடியூப்பரான இளைஞர் உட்பட நால்வர் சென்றுள்ளனர் என்று கூறப்படுகின்றது. ஆயினும் அவர் களைத் தடுத்துவைத்த அந்தப் பகுதி மக்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர். இளவாலைப் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று அந்த நால்வரையும் பொலிஸ் நிலையம் கொண்டு சென்று விசாரணைக்குட்படுத்திய பின்னர் கைது செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் இ.அர்ச்சுனா, வடக்கு மாகாணத்தில் வறுமையில் உள்ள குடும்பங்களுக்கு உதவி செய்யும் பாசாங்கில் சில யூடியூப் பேர்வழிகள் அத்துமீறுகின்றனர் என்று சுட்டிக்காட்டியிருந்தார்.

(அ-எ-26-125)


## மரண அறிவித்தல்



பிறப்பு 18 . 05 . 1947 — இறப்பு 08 . 03 . 2025

**அமரர் சுப்பிரமணியம் கமலநாதன்**

வளலாய் அச்சுவேலியை பிறப்பிடமாகவும் வறணன் கதிரிப்பாய் அச்சுவேலியை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கமலநாதன் அவர்கள் நேற்றுமுன்தினம் (08.03.2025) சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார். அன்னார் காலம் சென்றவர்களான சுப்பிரமணியம்-சரஸ்வதி தம்பதியின் அன்பு மகனும் செல்வராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை-பத்தினியார் தம்பதியின் அன்பு மருமகனும் செல்வகரன் (லண்டன்) மலர்விழி (அபிவிருத்தி உத்தியோகத்தர் யாழ்ப்பாணப் பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் தமயந்தி (லண்டன்), பகீரதராஜ் (ஆசிரியர் யா/புனித சாள்ஸ் ம.வி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் தன்வந் (லண்டன்), வைரவ் (லண்டன்), ஆரன் (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை) அஸ்வின்ராஜ் (கொக்குவில் இந்து முன்பள்ளி) ஆகியோரின் அன்புப் பேரனும் கமலேஸ்வரி கமலநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கருணாகரனின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (10.03.2025) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வளலாய் கூனாங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

077 397 5179
077 607 9844
076 928 8980

தகவல்:
குடும்பத்தினர்

## இசை வகுப்புக்கள்

சிறுவர் பெரியவர் உட்பட அனைத்து தரப்பினருக்கும் யாழ் நகரை அண்மித்த பகுதியில் கிற்றார் , ஓகன் வகுப்புக்கள் கற்பிக்கப்படுகின்றன.

தொடர்களுக்கு :- 0718475086

## அறை வாடகைக்கு உண்டு

படிக்கும் பெண் மாணவர்கள் அல்லது தாதியர் தொழில் புரியும் பெண்களுக்கு நல்லூரை அண்டிய சுற்றாடலில் 1 அறை வாடகைக்கு உண்டு

தொடர்பு: 076 616 8956,077 049 5501, 021 222 1805

## கண்ணீர் அஞ்சலி

**அமரர் செல்வரட்ணம் துரைசிங்கம் (சிவசாமி)**



மண்ணில் 04.11.1933 — விண்ணில் 07.03.2025

எமது கல்லூரியின் உடற்கல்வி விரிவுரையாளர் திரு T.வாகீஸ்வரன் அவர்களின் மாமனார் செல்வரட்ணம் துரைசிங்கம் (சிவசாமி) அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கெடுப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனை பிரார்த்திக்கிறோம்.

கல்லூரிச்சமூகம்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

## மரண அறிவித்தல்



தோற்றம் 04 . 11 . 1933 — மறைவு 07 . 03 . 2025

**செல்வரட்ணம் துரைசிங்கம்**

சுண்டிக்குளியைப் பிறப்பிடமாகவும், ஈச்சமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரட்ணம் துரைசிங்கம் (சிவசாமி) அவர்கள் கடந்த 07.03.2025 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வரட்ணம்-தெய்வானைப்பிள்ளை தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-பூரணம் தம்பதியின் பாசமிகு மருமகனும் நவமணி (மங்கையற்கரசி) அவர்களின் அன்புக் கணவரும் சிவராமலிங்கத்தின் அன்புச் சகோதரரும் ஜெயந்தினி (யா/கொழும்புத்துறை சென் ஜோசப் வித்தியாலய ஓய்வு பெற்ற ஆசிரியை), ஜெயகாந்தன், ஜெயவதனி, ஜெகநாதன், ஜெயதர்சினி (யா/கொழும்புத்துறை சென் ஜோசப் வித்தியாலய ஆசிரியை), ஜெயானந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவபாதம் (யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஓய்வு பெற்ற ஆசிரியர்), நந்தினி, ஜெயரூபன், சுதர்சினி, வாகீஸ்வரன் (யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி விரிவுரையாளர்), மேஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் கீர்த்தனா, ஆர்த்திகன், பிருந்துவி, யாதேவ், அபிதா, வினுஷ், நிந்துஜன், கரிஷாந், மகிஷாயினி, பிரவீன், அனன்வாரணன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.03.2025) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரணில் கூறிய...

அதை விடுத்து பட்டியல்களை வெளியிட்டுக்கொண்டிருப்பது பயனற்றது.

இவ்வாறு ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த கால அரசாங்கங்களின் மோசடிகள் தொடர்பில் இந்த அரசாங்கம் தொடர்ச்சியாகப் பட்டியல்களை வெளியிடுகிறது. ஆனால் எந்தவித சட்ட நடவடிக்கைகளையும் அவற்றுக்கு எதிராக எடுக்கவில்லை. 75 ஆண்டுகால அரசியலையும், அரசியல்வாதிகளையும் ஊழல் மோசடியாளர்கள் என்று வாய்க்கு வந்தாற்போன்று குற்றஞ்சாட்டினார்கள். இதனால் நாட்டுக்குச் சேவையாற்றிய சிறந்த அரசியல்வாதிகளும் அவமதிக்கப்படுகின்றார்கள்.

கடந்த அரசாங்கத்தில் மதுபானசாலை அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்ட நபர்களின் பெயர்கள் இதுவரையில் முழுமையாக வெளியிடப்படவில்லை. ஆனால் ஒட்டுமொத்த அரசியல்வாதிகளும் மதுபானசாலை அனுமதிப்பத்திரம் பெற்றதைப் போன்ற சித்திரிப்பையே மக்கள் மத்தியில் ஆட்சியாளர்கள் ஏற்படுத்தினார்கள்.

அரசியல்வாதிகள் ஊழல் மோசடி செய்துள்ளார்கள் என்று அரசாங்கம் பொதுவாகக் குறிப்பிடுகிறது. அவர்கள் யார் என்பதை மக்களுக்கு பகிரங்கமாக அறிவித்துவிட்டு சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதை விடுத்து நாடாளுமன்றத்திலும், பொது இடங்களிலும் பரீட்சைப் பெறுபேற்றை அறிவிப்பதைப் போன்று செயற்பட்டுக்கொண்டிருந்தால் எதுவும் மாற்றமடையாது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அல்ஜெசீரா ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்த விடயங்களை அரசியலுக்குப் பயன்படுத்திக்கொள்ளாமல் முறையான சட்ட நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். தேசிய மட்டத்தில் ஒரு விடயத்தைக் கையாள்வதற்கும், சர்வதேச மட்டத்தில் ஒரு விடயத்தை கையாள்வதற்கும் இடையில் பரஸ்பர வேறுபாடுகள் காணப்படுகின்றன என்பதை அரசாங்கம் விளங்கிக்கொள்ள வேண்டும் - என்றார். (அ-எ-இ)

## காணாமல்...

நடத்தி நீதியைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணை சிறப்பாக நடைபெற்று வருகின்றது. வெளியில் தெரியாவிட்டாலும் உள்ளே விடயங்கள் காத்திரமாக நடைபெறுகின்றன.

மத்திய வங்கி பிணைமுறி மோசடி, தாஜுடீன் கொலை, லலித், குகன் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதனால் விசாரணைகள் தொடர்பில் குழப்பமடைய வேண்டாம்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இரு வருடங்களுக்கு முன்னர் இலங்கை தொடர்பில் தீர்மானமொன்று முன்வைக்கப்பட்டது. மனித உரிமை பாதுகாக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. எனவே, மனித உரிமைகளை பாதுகாப்பதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தை மாற்றுவதற்கும் தீர்மானித்துள்ளோம். நீதி, பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சு என மூன்று அமைச்சுகளையும் உள்ளடக்கிய வகையில் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது - என்றார். (அ-எ-44)

## ரணில்...

மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பட்டலந்த ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பிலும் விசாரணையில் கவனம் செலுத்தப்படும். மத்திய வங்கி திறைசேரி பிணை முறி மோசடி, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் என்பன தொடர்பாகவும் விசாரணைகள் முன்னெடுக்கப்படும். இவை இரண்டும் ரணில் விக்கிரமசிங்கவின் பதவிக் காலத்திலேயே நடந்துள்ளன.

வெளிப்படைத் தன்மை தொடர்பாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது. ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான அனைத்துக் குற்றச்சாட்டுகள் தொடர்பாகவும் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் - என்றார். (அ-எ-இ)

## கொழும்பில்...

தமிழரசுக் கட்சி. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்றுக்காலை வவுனியாவில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியொன்றில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் எதிர்வரும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. உள்ளூராட்சித் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுவதில்லை என்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கொழும்பு மாநகரசபையில் தமிழ் மக்கள் வசிக்காத வட்டாரங்களும் உள்ளன. அங்கு வேட்பாளர்களை நியமிப்பது சவாலானது. அங்குள்ள ஏனைய கட்சிகளுடன் இணைந்து போட்டியிட்டாலும் அந்த வேட்பாளர்களின் பின்புலங்கள் தொடர்பாக ஆராய்வதில் பல சிக்கல்கள் உள்ளன. ஆகையால் இம்முறை கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுவதில்லை என்று கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானித்துள்ளது. (அ-எ-110)

## தேர்தலின்பின்...

தீர்மானிக்கப்பட்டுள்ளது. அநுர அலை இன்னும் குறையவில்லை. அதை குறைத்து மதிப்பிடமுடியாது. நாம் கவனமாகக் கையாளவேண்டும்.

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும், பதில் பொதுச் செயலருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் வவுனியாவில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று நடைபெற்றது. அதன்பின்னர் குருமன்காடு, காளிகோயில் வீதியில் கட்சியின் அலுவலகத் திறப்பு நிகழ்வு நடைபெற்றது. அப்போது நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே எம்.ஏ.சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மத்திய செயற்குழுக் கூட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பாக மட்டுமே ஆராயப்பட்டது. கட்சியின் மத்திய செயற்குழு உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிடுவது தொடர்பான தீர்மானங்களை ஏகமனதாக எடுத்துள்ளது. வடக்கு - கிழக்கு மாவட்டங்களின் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் இலங்கைத் தமிழரசுக் கட்சி தனித்துப் போட்டியிடும்.

இந்தமுறை நாடு அநுர அலையில் உள்ளது. நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி தனிப் பெரும்பான்மையை பெற்றுள்ளது. வடக்கு, கிழக்கில் மட்டக்களப்பு தவிர ஏனைய மாவட்டங்களில் அநுர அலையில் எமது மக்களின் வாக்குகள் சென்றுள்ளன. திருகோணமலை, மட்டக்களப்பில் நாம் பெரும்பான்மை பெற முடியாது. வடக்கில் நாம்தான் பெரும்பான்மை. எனினும் மக்கள் அநுர அலையில் சிக்கி ஜனாதிபதி தேர்தலைக் காட்டிலும் நாடாளுமன்றத் தேர்தலில் அதிக வாக்குகளை வழங்கியிருந்தார்கள். ஜனாதிபதித் தேர்தலில் நாம் ஆதரவு வழங்கிய ஐக்கிய மக்கள் சக்தியின் சஜித் பிரேமதாஸவே வடக்குக் கிழக்கில் பெரும்பான்மை பெற்றார். ஆனால் நாடாளுமன்றத் தேர்தலில் இந்த நிலை மாறியது.

தற்போது அநுர அலை குறைந்துவிட்டது என்கிறார்கள் சிலர். அப்படிக் கூற முடியாது. அநுர அலை தற்போதும் இருக்கிறது. அது குறைவடைய சில காலம் செல்லலாம். நாம் கவனமாகக் கையாள வேண்டும். நாடு அநுரவோடு இருக்கட்டும். நமது ஊர் நம்மோடு, நாம் வீட்டோடு எனச் செயற்படவேண்டும்.

எமது உள்ளூர் அதிகாரங்களை நாம் விடமுடியாது. நாம் இந்தத் தேர்தலில் சிறப்பானவர்களை, செல்வாக்குமிக்கவர்களை நிறுத்தவேண்டும். அதன் மூலமே அதிக வெற்றி வாய்ப்பை பெற முடியும். அவ்வாறான தீர்மானங்களை எடுக்கும் அதிகாரத்தை எமது மாவட்டக் கிளைகளுக்கு வழங்கியுள்ளோம். தேர்தல் முடிந்த பின் ஆட்சி அமைக்கின்ற போது ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் பேசி ஆட்சி அமைப்பதற்கான ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டு அது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சில சபைகளின் நிலைமையைக் கருத்திற்கொண்டு ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடலாம் எனத் தீர்மானித்துள்ளோம். வவுனியா வடக்கு, சம்மாந்துறை, ஏறாவூர் ஆகிய பகுதிகளில் ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடுவதற்கான தமிழரசுக் கட்சியின் வாசல் திறந்தே உள்ளது.

வவுனியா வடக்கில் நாம் பிரிந்து செயற்படுவோமாக இருந்தால் பெரும்பான்மையினரிடம் அந்தப் பிரதேசசபை செல்லும் வாய்ப்புள்ளது. சம்மாந்துறை, ஏறாவூர் ஆகிய பகுதிகளில் எம்மிடம் பெரும்பான்மை இல்லை. ஆகவே இணைந்து போட்டியிடலாம் எனத் தீர்மானத்துள்ளோம் - என்றார். (அ-எ-110)

## இளைஞர்...

சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்த ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி, திருநகர்ப் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரே தூக்கில் தொங்கிய நிலையில் இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த இவர், தர்மபுரத்தில் உள்ள மறுவாழ்வு நிலையத்தில் நேற்றுமுன்தினம் சேர்க்கப்பட்டிருந்தார்.

இந்தச்சம்பவம் தொடர்பாக கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-113)

## 'பெரும்'...

இலங்கை வரலாற்றில் பொலிஸாருக்குப் பயந்து ஒரு பொலிஸ்மா அதிபர் ஓடி ஒளிந்துகொண்டிருப்பது இதுவே முதன் முறை.

ஷானி அபேசேகர ஒரு திறமையான நபர் என்பதால் மறைந்திருக்கும் தேசபந்து தென்னேக்கோனை அவர் கைது செய்வார். 76 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தக் கட்சியினருக்கு (தேசிய மக்கள் சக்தி) ஆட்சி அமைக்கும் அதிகாரம் கிடைத்திருக்கின்றது. அதனால் அவர்களுக்கு மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் அவகாசம் வழங்கவேண்டும். நாட்டுக்கு நல்லது செய்வார்கள் என்று நம்புகின்றேன். தற்போதைய அரசாங்கம் நல்ல பாதையில் பயணிக்கின்றது என்றும் நம்புகின்றேன் - என்றார். (அ-எ-இ)

## மயங்கி...

பிறப்பிடமாகவும் வதிரியை வசிப்பிடமாகவும் கொண்ட பாலகிருஷ்ணன் தணிகைவேள் (வயது-45) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இவர் நெல்லியடி மத்திய கல்லூரி ஆசிரியராவார்.

மயக்கமுற்ற இவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும், நேற்று ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தார் என்றும், இவரது உயிரிழப்புக்கு மாரடைப்பே காரணம் என்றும் கூறப்படுகின்றது. (அ-எ-66)

## ரயிலுடன்...

இந்தச் சம்பவம் நேற்று யாழ்ப்பாணம், மீசாலை, புத்தூர் சந்திப் பகுதியில் நடந்துள்ளது. வாழ்வாதாரத்துக்காக வளர்க்கப்பட்ட பசு மாடொன்றே ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளாகி பரிதாபமாக உயிரிழந்துள்ளது. (அ-எ-இ)

## 2025...

வடிக்கைகள் இந்த வருட இறுதிக்குள் பூர்த்தியாகும் என ஆட்பதிவுத் திணைக்கள பணிப்பாளர் நாயகம் சூரியபெரும தெரிவித்துள்ளார்.

புதிய இலத்திரனியல் அடையாள அட்டையில் கைவிரல் ரேகை அடையாளம், கண், முகம் என்பன அடங்கியிருக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

புதிய அடையாள அட்டையின் மூலம் பிறப்புச்சான்றிதழ் தொடர்பான விவரத்தையும், வரி இலக்கம் போன்ற விவரங்களையும் தெரிந்துகொள்ளலாம். டிஜிட்டல் பிறப்புச் சான்றிதழ் விநியோக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கடந்த ஜனவரி மாதம் 21ஆம் திகதிக்குப் பின்னர் கொழும்பில் பிறந்த பிள்ளைகளுக்கு முதல் கட்டமாக டிஜிட்டல் பிறப்புச் சான்றிதழ்கள் விநியோகிக்கப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (அ-எ-6)

## பஸ்கள்...

செய்யப்பட்டுள்ளன. இந்த விடயம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. உரிய விசாரணைகள் நடைபெற்றுமுடியும்வரையில் எவர் மீதும் குற்றஞ்சுமத்த விரும்பவில்லை என்று போக்குவரத்து பிரதியமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-எ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கராஸ்கஸில் பாதுகாப்பில்லை

கராஸ்கஸ், மார்ச் 10

உலகில் பாதுகாப்பற்ற நகரமாக, தென்னமெரிக்க நாடான வெனிசுலாவின் கராஸ்கஸ் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூடுகள் வன்முறைகள் இவற்றை அடிப்படையாக வைத்து, பிரபல நிறுவனமொன்றால் இந்தப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. வெனிசுலாவில் அதிபர் நிக்கோலஸ் மதுரோவுக்கு எதிராக நீண்டகாலமாகப் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. அத்துடன் அங்கு கொள்ளைகள் கொலைகளும் அதிகரித்துள்ளன. இதைத் தொடர்ந்தே, உலகின் பாதுகாப்பற்ற நகரமாக கராஸ்கஸ் நகரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் கராச்சி நகரம், பாதுகாப்பற்ற நகரங்களின் பட்டியலில் இரண்டாவது இடத்தில் காணப்படுகின்றது. அரசியல் பதற்றங்கள் மற்றும் வன்முறைக் குழுவின் செயற்பாடுகள் காரணமாகவே கராச்சிக்கு இந்தப் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இராணுவ ஆட்சி இடம்பெற்றுவரும் மியான்மரின் தலைநகர் யாங்கூன் மூன்றாவது இடத்திலும், பொஹோகரம் அமைப்பு ஆதிக்கம் செலுத்திவரும் நைஜீரியாவின் லாகோஸ் நகரம் நான்காவது இடத்திலும், போதைப் பொருளின் சுவர்க்கபுரி என்று அழைக்கப்படும் பிலிப்பைன்ஸின் மணிலா நகரம் ஐந்தாவது இடத்திலும் உள்ளன. (ம)

# சிரியாவில் மீண்டும் உள்நாட்டுப் போர்!

டமஸ்கஸ், மார்ச் 10

சிரியாவில் மீண்டும் உள்நாட்டுக் கலவரங்கள் ஏற்பட்டுள்ள நிலையில், கடந்த இரண்டு நாள்களில் மட்டும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

சிரியாவை ஆளும் அல் ஷாம் போராளிகளுக்கும், முன்னாள் அதிபர் அல் அசாத்தின் ஆதரவுக் குழுவுக்கும் இடையில் மீண்டும் மோதல்கள் வெடித்துள்ளன. சிரியத் தலைநகர் டமஸ்கஸின் புறநகர்ப் பகுதிகளிலும், கடற்கரை நகர்களிலும் அசாத்தின் ஆதரவாளர்கள் ஊடுருவியதைத் தொடர்ந்தே இந்தப் போர் இடம்பெற்று வருகின்றது.

கடந்த இரண்டு நாள்களாக சிரியாவில் தொடர்ச்சியாக பதற்றநிலை நிலவி வருகின்றது. பல்வேறுபட்ட தாக்குதல்களில் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த 750 பொதுமக்கள் உட்பட ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். சிரியாவில் செயற்பட்டுவரும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் அங்குள்ள நிலைமைகளை உறுதிப்படுத்தியுள்ளது. இந்தப் பதற்றங்கள் காரணமாக, சிரியாவுக்கான விமான சேவைகளை மீண்டும் நிறுத்துவதற்கு விமான நிறுவனங்கள் பரிசீலித்து வருகின்றன. அத்துடன், சிரியாவுக்கான மீட்பு நிதியை உலக நாடுகள் நிறுத்தவும் சாத்தியங்கள் உள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது. (ம)

# ஹெரோய்னுடன் கைதான இளைஞர் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், மார்ச் 10

ஆனைக்கோட்டை, சாவற்கட்டுப் பகுதியில் ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க மல்லாகம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது என்று மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

மானிப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சாவற்கட்டுப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் சோதனைக்குட்படுத்தப்பட்டபோது, அவரிடம் இருந்து 2 கிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதையடுத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டார். அவரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

சாவற்கட்டுப் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-125)



# அச்சுவேலி மருத்துவமனையில் 'க்ளீன் சிறீலங்கா' வேலைத்திட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 10

'கிளீன் ஸ்ரீலங்கா' வேலைத்திட்டத்தின் கீழான துப்புரவுப்பணிகள் நேற்று அச்சுவேலி பிரதேச மருத்துவமனையில் முன்னெடுக்கப்பட்டன.

கோப்பாய் பிரதேச செயலாளர் சிவசிறி தலைமையில் குறித்த வேலைத் திட்டம் இடம்பெற்றது.

இதன்போது பிரதேச மருத்துவமனையின் பணிப்பாளர், பணியாளர்கள், நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர், அச்சுவேலி பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர்கள், அச்சுவேலி சிற்றூர்தி சங்கத்தினர் மற்றும் பொதுமக்கள், சனசமூக நிலைய உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு மருத்துவமனையின் உள்ளக வளாகங்களை துப்புரவுசெய்தனர். (ச-20)

# மருதனார்மடச் சந்தியில் வீதிச்சமிக்ஞை வேண்டும்

## மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச்.10

மருதனார்மடச் சந்தியில் வீதிச் சமிக்ஞை விளக்குகள் இன்மையினால் அடிக்கடி விபத்துகள் நேரிடுகின்றன. விபத்துகளைத் தவிர்ப்பதற்கு குறித்த பகுதியில் வீதிச் சமிக்ஞைகளைப் பொருத்தித் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற விவசாயக்குழுக்கூட்டத்தில் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

மருதனார் மடச் சந்தையில் அதிகளவான விவசாயிகள், பொதுமக்கள் எனப் பலரும் காலை தொடக்கம் ஒன்றுகூடுகின்றனர். இதன்போது இந்தப் பகுதியில் வாகன நெரிசல் ஏற்படுவதுடன் சந்தைக்கு வருவோர் விபத்துகளிலும் சிக்குகின்றனர். ஆகவே உரிய அதிகாரிகள் இந்த வீதியில் வீதிச் சமிக்ஞைகளைப் பொருத்தித் தரவேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த மாவட்டச் செயலர், யாழ்.மாவட்டத்தில் எட்டு முக்கியமான பகுதிகளில் வீதி விளக்குகளைப் பொருத்துவது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. வெகுவிரைவில் இது குறித்து நடவடிக்கைகளை எடுப்பேன் - என்றார். (ச-125)



# ஜனகன் வெற்றிக்கிண்ணம்; கிளிநொச்சியில் அறிமுகவிழா

கிளிநொச்சி, மார்ச்.10

கிளிநொச்சி மாவட்ட கிரிக்கெட் அணிகள் மோதும் ஜனகன் வெற்றிக் கிண்ணத்தின் அறிமுக விழா கிளிநொச்சி மகாவித்தியாலய பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் நேற்று இடம்பெற்றது.

இறுதிப்போரில் காணாமலாக்கப்பட்ட, கல்வியிலும் விளையாட்டிலும் சிறந்து விளங்கிய கிளிநொச்சி மகாவித்தியாலய பழைய மாணவனும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்த ப.நடேசனின் மகனுமான ஜனகனின் ஞாபகார்த்தமாக இந்த வெற்றிக்கிண்ணம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. நிகழ்வில் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், நிகழ்வின் பங்குதாரர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-113)

**தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு**

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 40 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு.பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- Whatsapp:- 0044 740 537 3526

(CS/57653) J-1

**தேவை**

யாழ் நகரில் இயங்கும் எமது நிறுவனத்திற்கு A / L படித்த கணக்கியல் அறிவுள்ள கணக்குகள் பதித்தல் தொடர்பான அனுபவம் உள்ள பெண் பிள்ளைகள் தேவை

தொடர்புகளுக்கு :- 0771221289



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.03.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org